# பழங்குடியினர் பண்பாடும் மருத்துவமும்

***முனைவர் கு.செந்தில்***
*தமிழ்த்துறைத்தலைவர்,*
*பாவேந்தர் பாரதிதாசன் கலை அறிவியல் கல்லூரி*
*மாத்தூர்*

மனித சமுதாயமே பழங்குடி அமைப்பிலிருந்து (Tribal Stage) வளர்ந்து வந்ததுதான். புவியியல் சூழலில் (Geographic Environment) ஒதுக்கப்பட்ட சில இனத்தார் மட்டும் இனக்குழு வாழ்விலேயே பின்தங்கிவிட்டனர். விஞ்ஞான உலகம் பலவித அதிசய சாதனைகளை நிகழ்த்திவரும் இக்காலகட்டத்தில் பழமையென்னும் மூடுபனியில் மூழ்கி புதுமையினைக் கண்டு மருளும் நிலையில் பழங்குடியின மக்கள் வாழ்கின்றனர்.

இவர்களின் பண்பாடு, பழக்கவழக்கம், வாழும்முறை, சுவையானவை, நாகரிகமற்ற மனிதன் பண்டைக்காலத்தில் எப்படி வாழ்ந்தானோ அதே முறையைப் பின்பற்றி இந்த நவீன உலகிலும் தனித்து ஒதுங்கி காட்டுப்பகுதியிலோ, மலைப்பகுதியிலோ வாழ்ந்து வருகின்றனர். பழங்குடியின் அனைத்துப் பண்புகளையும் ஏற்கும் ஒரு பழங்குடியினரின் வாழ்விடம் மிகத் தொடக்க காலம் முதலே அவ்விடத்திலேயே காணப்படின் அப்பழங்குடியானது, முது பழங்குடி என்றழைக்கப்படுகிறது. ஆஸ்திரேலியாவில் வாழும் பழங்குடிகளை இதன் அடிப்படையில் தான் ‘‘அபார்ஜைன்’’ பழங்குடி என்று அழைக்கின்றனர். வாழும் நிலப்பரப்பிற்கு முதன்முதலாக இவர்கள் குடியேறிவர்களாக இருப்பதால் இவர்களின் பழமை பல நூற்றாண்டுகளைக் குறிப்பதாகக் கூறப்படுகிறது.

**பழங்குடி எனும் சொல்**

ஆங்கிலத்தில் முதன்முதலாகப் பழங்குடி என்னும் வார்த்தை யூதர்களிடம் தான் பயன்படுத்தப்பட்டுள்ளது. கி.மு. 1000 ஆண்டுவரை யூதர்கள் 12 குழுவாக பிரிந்து வாழ்ந்தனர். இந்த குழுக்களை ‘‘இஸ்ரவேலின்’’ 12 பழங்குடி இனத்தவர் என்று கூறப்படுகிறது. இந்த 12 குழு இனத்தவர்களின் தந்தை ஒருவரே அதாவது 12 தலைவர்களும் சகோதரர்களே. இதிலிருந்து அங்காங்கே குழுக்களாக வசிக்கும் பல குடும்பத்தினர்களின் மூதாதையர்கள் ஒருவர் என்றால் அந்தச் சமூகக் குழுவினரைப் பழங்குடி என்று அழைக்க ஆரம்பித்தனர்.

உலகில் சுமார் 698 இனங்களைச் சேர்ந்த பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இது உலக மக்கள் தொகையில் சராசரி 6.98% ஆகும். இதில் இந்தியாவில் மட்டும் 427 இனப் பழங்குடி மக்கள் வாழ்கின்றனர். இதேபோல ஆசியாவின் மற்ற நாடுகளிலும் தென்னமெரிக்கா, ஆப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, வட அமெரிக்கா, ஆகிய கண்டங்களிலும் பழங்குடி இன மக்கள் வாழ்கின்றனர். உலகில் உள்ள ஒவ்வொரு நாட்டின் மக்கள் தொகையிலும் 5 முதல் 10 சதவீதம் வரை பழங்குடியினர் எண்ணிக்கை காணப்படுகிறது.

**பழங்குடியினரை இனம் கண்ட ஐரோப்பியர்கள்**

கி.பி. 1400-ஆம் ஆண்டில் பல ஐரோப்பிய நாடுகள், ஆப்பிரிக்கா, ஆசியா, வடஅமெரிக்கா, தென்னமெரிக்கா ஆகிய கண்டங்களில் குடியேறி வாழத்தொடங்கினர். தாங்கள் குடியேறிய பகுதிகளிலும் பல நூற்றாண்டுகளாகத் தனித்து குழுவாக வாழந்து கொண்டிருந்த மக்களை ‘பழங்குடிகள்’ என்று ஐரோப்பிய நாடுகள் அழைக்க ஆரம்பித்தன. இம்மக்கள் வாழும் பகுதியைப் பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதிகள் என்று குறிப்பிட்டுப்பேசின. காரணம் இந்தப் பழங்குடிகளின் பொருளாதாரம், சமூகஅமைப்பு, பழக்க வழக்கம், பண்பாடு, கலாச்சாரம் வித்தியாசமாகவும் வேறுபட்டும் இருந்தன.

**தனிச்சிறப்பு**

ஆராய்ச்சியாளர்கள் பழங்குடி என்பதற்கு சில தனிச்சிறப்புகளை வரையறுத்தனர். பழங்குடியினர் தந்தைவழிச் சந்ததியினர் அவர்களின் பழக்க வழக்கம், மொழி, வசிக்கும் இடம், நாகரீகம், பண்பாடு, ஒரேமாதிரியாகவும், வேறுபாடுஇன்றி அனைத்தையும் பகிர்ந்துகொள்ளும் தன்மையுடன் கானப்படும். மேலும் அன்றாட உணவிற்கு மட்டும் பொருளாதாரத்தை ஏற்படுத்திக்கொண்டு வேறு எவ்விதமான முன்னேற்றமும் இல்லாதவர்கள் ‘பழங்குடிகள்’ என்று விளக்கம் தருகின்றனர். இப்படி உணவுக்காக மட்டும் பொருளாதாரத்தை ஏற்படுத்தி உயிர்வாழும் பழக்கம் கொண்டவர்களாக இன்றும் நைஜீரியாவின் டிவ் (Tiv) பழங்குடி மக்களிடமும், அமெரிக்காவின் ஜீனி பழங்குடி மக்களிடமும் காணப்படுகின்றன.

**குறிப்பிடத்தக்கவர்கள்**

பழங்குடிகள் என்றாலே வாழ்வுநிலையில் வேறுபட்டவர்கள் என்பதைக்குறிக்கும். இவர்களின் வாழ்க்கை முறைகள் சுவையானதாகவும் குறிப்பிடும்படியாகவும் அமைந்திருக்கும். அந்தவகையில் உலகில் வாழும் பழங்குடி மக்களில் சிலர் குறிப்பிட்டுச் சொல்லக்கூடியவர்களாக உள்ளனர். அவர்களைப் பற்றிய சுவையான தகவல்களைக் காணலாம்.

**மனிதனைச் சாப்பிடும் இனம்**

வடமேற்கு ஆப்பிரிக்க நாடான கான, சூடான், காங்கோ மத்திய ஆப்பிரிக்கா குடியரசு போன்ற நாடுகளில் வாழும் “அசாந்தி” பழங்குடியினர் மனதஇனைத்தைச் சாப்பிடும் பழக்கம் உடையவர்கள். இதேபோன்று தந்தக்கடற்கரை, ஸைபீரியா ஆகிய நாடுகளில் வாழும் “பான்” பழங்குடியினரும் மனிதனைச் சாப்பிடும் பழக்கம் உடையவர்கள்.

**ஓணான் சாப்பிடும் இனம்**

இந்தியாவின் ஆந்திரப்பிரதேசம், ஒரிஸா, மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வாழும் “கோயா” எனும் பழங்குடியினர் ஓணான் சாப்பிடும் பழக்கம் உடையவர்கள். ஆனால் இம்மக்கள் பறவைகளை வேட்டையாடிச் சாப்பிடுவது இல்லை.

**பாம்பு தவளைப் பிரியர்கள்**

இந்தியாவின் ஆந்திரப்பிரதேசம், ஒரிஸா, மத்தியப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் வாழும் “கதபா” எனும் பழங்குடியினர் பாம்பு, தவளைகளை முக்கிய உணவாக எடுத்துக்கொள்கின்றனர்.

**உலகிலேயே மிகக்குள்ளமானவர்கள்**

“ஜைர்” என்ற நாட்டில் “கட்டூரி” எனும் மலைப்பகுதியில் வாழும் “முபட்டி” பழங்குடியினர் உலகிலேயே மிகவும் குள்ளமான பழங்குடியினர். இவர்களில் ஆண்கள் நான்கு அடி ஆறு அங்குலமும், பெண்கள் மூன்று அடி ஐந்து அங்குலமும் உடையவர்கள்.

**உலகிலேயே மிக உயரமானவர்கள்**

வாட்டுஸி என அழைக்கப்படும் “டுட்ஸ்” பழங்குடிமக்கள் உலகிலேயே மிக உயரமான பழங்குடியின மக்கள். இவர்கள் ருவாண்டா, புருண்டி ஆகிய நாடுகளில் சிறுபான்மைச் சமூகமாக வாழ்கின்றனர். ருவாண்டா நாட்டு மக்கள் தொகையில் 14 சதவீதம், புருண்டி நாட்டு மக்கள் தொகையில் ஒன்பது சதவீதம் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர்களில் ஆண்கள் 7 அடி 13 அங்குலமும், பெண்கள் 6 அடி 10 அங்குளமும் உள்ளனர்.

**பண்பாடு**

பழங்குடி இன மக்களின் பழக்க வழக்கங்களும் வாழும் முறையும், பண்பாடும், சுவையானவை. நாகரிகமற்ற மனிதன் பண்டைக்காலத்தில் எப்படி வாழ்ந்தானோ அதே முறையைப்பின்பற்றி இந்த நவீன உலகிலும் தனித்த நிலையில் அடர்ந்தவனப்பகுதியிலும் உயர்ந்த மலைப்பகுதியிலும்

மலைச்சரிவுகளிலும் வாழ்ந்து வருகின்றனர். கொடிய விலங்குகளிடமிருந்தும் இயற்கையின் சீற்றங்களிலிருந்தும். தங்களைப்பாதுகாத்துக் கொள்வதற்கு மலைக்குகைகளிலும், பாறையின் இடுக்குகளிலும், மரப்பொந்துகளிலும் இருப்பிடங்களை அமைத்து இருந்தனர். இன்று ஓரளவு இந்நிலையில் இருந்து மாற்றம் பெற்று தங்களுக்குத் தேவையான இல்லத்தை அரசின் உதவியுடன் ஒருசிலர் மாற்றிக்கொண்டுள்ளனர்.

ஆரம்பத்தில் ஆடைகளின்றித் திரிந்த இம்மக்கள் மரப்பட்டை, இலை, தழைகள், விலங்குகளின் தோல்களை ஆடைகளாகப் பயன்படுத்தி குளிர், வெப்பம், ஆகியவற்றிலிருந்து பாதுகாத்துக்கொண்டுள்ளனர். தற்சமயம் சமவெளி மக்களைப் போல ஒருசிலரைத் தவிர நூல் ஆடைஅணிகின்றனர்.

**மொழி**

மக்களினத்தை பிற உயிரினங்களிலிருந்து வேறுபடுத்தியும் உயர்ந்ததாகவும் செய்வது. மொழியே மக்களின் மொழியால் உருவாகிறது. மொழியின்றேல் மக்கள் வாழ்வு மாக்கள் வாழ்வேயாகும், ஆனால் மக்களினம் தன்னுடைய கருத்தை வெளிப்படுத்துவதற்கு துணைபுரியக்கூடிய குறிகள், அடையாளங்கள் முகக்குறிப்புகள் கைச்சாடைகள், ஓவியங்கள், எழுத்துக்கள் எனப்பல கருத்துப்பரிமாற்றக் குறிப்புகள் பலவற்றைக் கையாண்டுள்து. ஆயினும் மொழியே இவற்றுள் தலையானது. ‘‘மொழி’’ என்பது மொழியப்படுவது, வாயால் மொழிந்து காதால் கேட்கப்படுவது ‘‘மொழி’’ என்று தமிழர்கள் பெயரிட்டுள்ளமை மிகவும் பொருத்தமுடையதாகும்.

உலகிலுள்ள மொழிகள் பண்பட்ட மொழிகள் பண்படா மொழிகள் என்று பிரிக்கப்படுகிறது. திராவிட மொழிகளுள், தமிழ், மலையாளம், கன்னடம், தெலுங்கு, துளு ஆகியவை பண்பட்ட மொழிகளாகக் கருதப்படுகின்றன. எழுத்து வடிவம் பெறாத பழங்குடியினரின்மொழிகள் பண்படா மொழிகளாகக் கருப்படுகின்றன. காரணம் பழங்குடியினர் மொழிகள் பேச்சு மொழியாகவே உள்ளது. அதற்கு எழுத்து வடிவம் கிடையாது, தமிழ்நாட்டில் உள்ள பழங்குடி இன மக்கள் அவர்களின் மொழியை அம்மக்களிடையே பேசுகின்றனர். வெளிமக்களிடம் பேசும் போது தமிழில் பேசவும் பழகிக்கொண்டனர். கல்வியறிவு மிகவும் பின்தங்கிய நிலையில்தான் காணப்படுகிறது. பழங்குடி மக்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனி தாய்மொழி உண்டு, அவை வெறும் பேச்சுமொழியே.

பழங்குடிஇன மக்கள் அனைவரும் தமது முன்னோர்களையும், இயற்கை (சூரியன், சந்திரன், காடு, மழை) போன்றவற்றை வழிபடுகின்றனர்.

தமிழ்நாட்டில் வசிக்கும் பழங்குடியினங்களில் தோடர், கோத்தர் ஆகிய இரு இனத்தவரும் ‘‘எருமையை’’ வழிபடுகின்றனர்.

ஒரு சமுதாயத்தின் செயல்பாடுகளிலிருந்து அச்சமுதாயத்தின் பண்பாட்டை அறியலாம். மக்களின் எண்ணங்கள் அவர்களின் வாழ்க்கையில் பிரதிபலிக்கிறது. அவை அம்மக்கள் சார்ந்த பண்பாடு, பண்பாடு மக்களின் தேவையை நிறைவேற்றுவதாக அமைகிறது. ஒரு சமுதாயம் சிறந்த வகையில் அமைய அச்சமுதாயம் கொண்டுள்ள பண்பாடு அதற்கு அடிப்படையாக அமைகிறது. மக்களின் வாழ்க்கை முறையில் பண்பாடு என்ற ஓர் அமைப்பு விளங்குவதால் தான் மக்கள் இணக்கமாக வாழ முடிகிறது. பண்பாட்டின் வழி மக்களின் உள்ளத்து உணர்வுகளை அறியலாம்.

விலங்கு நிலையிலிருந்த மனித இனம் பண்பட்ட சமூக வாழ்வினை மேற்கொண்டு வாழும் நிலையிலும் மக்களுடைய வாழ்வின் அனைத்து நிலைகளிலிருந்தும் வெளிப்படுவது. பண்பாடாகும் எனவே ஒரு சமூக மக்களின் சிறு அசைவுகளையும் பண்பாடு உள்ளடக்கியதாக விளங்குகிறது. பழங்குடியினரின் எண்ணங்கள், வாழ்க்கைமுறை, சடங்குமுறைகள். பழக்கவழக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அவர்களின் பண்பாடு அமைகிறது. இதில் அம்மக்களின் பிறப்பு முதல் இறப்பு வரையான அனைத்து நிலைகளும் அடங்கும், எனவே பழங்குடி இன மக்களுடைய இன்றைய நிகழ்வுகளின் செயல்பாடுகளில் மட்டுமின்றி துன்பியல் சார்ந்த செயல்பாடுகளில் இருந்தும் பண்பாடானது வெளிப்படுகிறது. பழங்குடியினர் மாறுபட்ட கலாச்சாரத்துடன் வாழ்ந்துவந்தாலும் உயர்ந்த பண்புடையவர்கள். சிறந்த பண்புடையவர்களாக இருப்பதோடு மட்டுமின்றி பழக்க வழக்கம் நம்பிக்கை, கலாச்சாரங்களில் மிகுந்த மதிப்புடையவர்களாகவும் கட்டுப்பாடு உடையவர்களாகவும் சிறந்து விளங்குகின்றனர்.

**மருத்துவம்**

நவீன முறைகளில் மாத்திரைகளும், மருந்துவகைகளும் அறுவை சிகிச்சைமுறைகளும், இன்று வியக்கத்தக்க வகையில் வளர்ந்து கொண்டிருக்கும் நாட்களில், நீலகிரி மலையின மக்களான கோத்தர்கள் மட்டும் மூலிகை மருத்துவமுறைகள் இன்றளவும் பெரும்பான்மையாகக் கடைபிடிக்கின்றனர். இம்மக்கள் தங்களது உணவு முறைகளிலேயே மூலிகை மருத்துவத்தை பயண்படுத்தி வருகின்றனர். அரசு மற்றும் தனியார் மருத்துவமனைகளுக்குச் சென்று மருத்துவம் பெற்றுக்கொள்ளும் வழக்கம் அரிதாக உள்ளது.

கோத்தர்கள் வாழும் மலைப்பகுதியில் கிடைக்கும் மூலிகைகளைப் பயன்படுத்தி நோய்களைக் குணமாக்கிக் கொள்வதுடன், கீழ்க்காணும் நோய்களுக்கு இவர்களே மருத்துவர்களாகவும் உள்ளனர்.

தலைக்கணம் (தலைப்பாரம்), கண்வலி, உடம்புசூடு, வயிற்றுவலி, காயம்பட்ட புண், எலும்பு முறிவு, சொறி, சிரங்கு, வாந்தி, விஷக்கடி, முள்தைத்தபுண், மகப்பேறு, தாய் உடல்நலம் பேணுதல், மஞ்சள்காமாலை போன்ற நோய்களுக்கு மூலிகை மருத்துவத்தைப் பயன்படுத்தி வருகின்றனர்.

மூலிகை மருத்துவமுறைக்கு இலைப்பகுதிகள், கொழுந்துப்பகுதிகள், தண்டுப்பகுதிகள், வேர்ப்பகுதிகள், போன்றவற்றையும் பயன்படுத்தப்படுகிறார்கள். பெரும்பாலும் பத்தியம் இல்லாத முறையில் பெரிதும் மருத்துவமுறைகளைக் கடைப்பிடிக்கின்றனர்.

**தலைக்கணம்**

''ஆமணக்கு'' செடிகளைப் பறித்து நெற்றிப்பகுதியலும், நெற்றியின் ஓரப்பகுதியிலும் துணியால் கட்டி ஒரு இரவுப்பொழுது மட்டும் இருந்தால் போதும் விடியற்காலையில் தலைக்கணம் குணமாகிவிடுகிறது.

**கண்வலி**

''சில்க்'' செடியின் இலையை அரைத்து அதிலிருந்து எடுக்கும் சாறினை மூன்றுமுறை கண்ணில் விடக் கண்வலி குணம் அடைகிறதாம்.

**உடம்புசூடு**

''சித்தகொல்லம்'' செடியின் இலைகளையும், தண்டுப்பகுதிகளையும் சிறிது தண்ணீர் சேர்த்து இடித்து அதன் சாறை எருமைப்பாலில் கலந்து குடிக்க வேண்டும் உடம்பு சூடு குணமாகிறது.

**வயிற்றுவலி**

''பேமது'' செடியின் இலை (கொழுந்துப் பகுதி)யுடன் தண்ணீர் கலந்து இடித்துப் பிழிந்து வெறும் வயிற்றில் குடித்தால் வயிற்று வலி நீங்கும்.

**காயம்பட்டபுண்**

உடலில் எந்தப் பகுதியில் காயம்பட்டாலும் காயம்பட்ட இடத்தில் ''புகடுதுளை'' செடியின் இலைகளை எடுத்துக் கசக்கிச் சாறைக் காயம்பட்ட இடத்தில் ஓரிருசொட்டுகள் விட்டால் போதும் அப்புண் குணமடைந்துவிடும்.

**எலும்பு முறிவு**

''எலும்பு முறிவு'' பகுதியில் வாளரிச்செடியின் கொழுந்து இலைகளைப் பறித்து விளக்கெண்ணை, நெய் கலந்து தடவி அந்த இலையை எலும்பு முறிவுப் பகுதியில் ஒட்டி பின் மூங்கில் குச்சியை அப்பகுதியில் வைத்துக் கட்டுகின்றனர். இரண்டு நாள் கழித்து எருமைத்தயிர் சேர்த்துக் கட்டப்படுகின்றது ஒருவாரம் கழித்து கட்டு பிரிக்கப்படுகிறது. அதன்பிறகு எலும்பு முறிவு குணம் அடைந்துவிடுகிறதாம்.

**சொறி, சிரங்கு**

''கடகூர்'' செடியின் வேர்ப்பகுதியை எடுத்து சிறிது தண்ணீர் சேர்த்து இடித்து அதில் எலுமிச்சைச் சாறை கலந்து உடம்பில் தேய்த்துக் காயவைத்திடவேண்டும் காய்ந்தபின் குளித்தால் போதும்.

**வாந்தி**

''மலைப்புல்க் கொடியின்'' இலைகளைப் பறித்து தேவையான அளவு தண்ணீர் கலந்து இடித்து சாறு எடுத்து ஒருவேளை குடிக்கவேண்டும், வாந்தி நின்று விடுகிறது.

**விஷக்கடி**

''போத்தாக் கொடியின்'' இலைகளைப்பறித்து தண்ணீர் கலந்து வேகவைத்து சூடுபறக்க ஆவிபிடித்து, அந்த நீரில் குளித்திட்டால் போதும். பூச்சிகளின் விஷத்தண்மை முறிந்து விடும்.

**மகப்பேறு, தாய் உடல் நலம் பேனுதல்**

பிள்ளைப்பெற்ற தாய்க்கு ''புல்க்'' இலைகளைப் பறித்து வேகவைத்து அச்சாற்றுடன் சாமை அரிசி சாதம் சேர்த்து உண்ண வேண்டும், ''அதனுடன் போத்தான்'' புல் ரசத்தில் காயவைத்த மான், ஆடு, மாடு, முயல், போன்ற விலங்குகளின் இறைச்சியையும் சேர்த்துக் கொள்ள வேண்டும், இது இரண்டு மாதம் வரை உண்ண வேண்டும். இரண்டு வாரம் கழித்து அப்பெண் உடல் திடகாத்திரமாக உருவாகிறாள்.

**மஞ்சள்காமாலை**

''காய்மேல்வேலி''யினைப் பறித்து எருமைப்பாலில் வேகவைத்து, ஒரு நாளைக்கு மூன்று வேலை வீதம், மூன்று நாள் குடித்தால் போதும். இம்மருந்து குடிக்கும் போது மோர்சாதம் மட்டும் சாப்பிடவேண்டும். இதை செய்து வந்தால் மஞ்சள் காமாலை குணமாகிறது.

காலநிலைக்கு ஏற்ப இன்று மருத்துவமுறைகளும் மாறிவருகின்றன. சித்த மருத்துவத்தில் தொடங்கிய மருத்துவமுறைகள் இன்று நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே செல்கிறது. ஆனால் இப்பழங்குடியினர் இன்னும் சிலர் சித்த மருத்துவமுறையினை பெருமளவில் நம்புகின்றனர். இதனால் மனிதனைத் தாக்கக்கூடிய பல நோய்களின் பெயர்களும், அதற்கான மருத்துவமுறைகளையும் அறிந்திராதவர்களாகவும் உள்ளனர். இதுபோன்ற நோய்கள் மக்களுக்கோ தன் குழந்தைகளுக்கோ ஏற்படுமாயின் அது கடவுளின் சாபம் எனக் கருதுகின்றனர். இதனால், பலரும், பல குழந்தைகளும் கொடிய நோய்களுக்குப் பலியாகும் அவல நிலையினை இன்றும் காணமுடிகிறது.